## Chapter - 10 - Speech for 26-February-2022 – Contd-2.

Life Divine -ஐ படிக்கும் போது, இந்த மாதிரி அத்தியாயம் அத்தியாயமாக படிக்கும் போது, நம்மை, நம் வாழ்வை, அல்லது நமக்கு நன்றாகத் தெரிந்த பிறர் வாழ்வை, நாட்டு நடப்பை, செய்திகளை, சமுதாய மனப்பான்மைகளை - பொருத்திப் பார்த்தால், ஒவ்வொரு அத்தியாயத்திற்குள்ளும் நம்மை பொருத்திப் பார்க்க முடியும். நாம் ஒன்றும் அன்னையாகவோ, அவதாரமாகவோ, யோகியாகவோ இதைச் செய்யவில்லை. இதை படிக்கவில்லை. ஆனால் வாழ்வில் ஆனந்தத்திற்கான பாதை இது தான் என்று பகவான், அன்னை, கர்மயோகி சொல்லியிருப்பதால், அதில் நாம் எங்கே இருக்கிறோம் என்று புரிவதற்காகவாவது - இன்று செய்கிறோமோ இல்லையோ- என்றாவது ஒரு நாள் செய்வதற்காகவாவது - அதற்கான கேள்விகளை கேட்டு கொள்வது நல்லது. குறிப்பாக, முன்னேறாமல் இருக்கும் இடங்கள், பிரச்சினையான இடங்கள், தடையாக உள்ள இடங்களில் - இது என்ன நிலை, முன் நிலையில் இருந்து இந்த நிலைக்கு எப்படி வந்தேன், அடுத்த நிலைக்கு எப்படி செல்வது, இந்த அசைவு, சலனம், மாற்றம், movement , change -க்களுக்கான காரணம் என்ன. இதை நடத்திய சக்தி எது, energy எது, அதன் பின் உள்ள நோக்கம் என்ன என்பது போன்ற கேள்விகளை கேட்க வேண்டும். அந்தந்த அத்தியாயங்களை ஒட்டிய தத்துவங்கள், சொற்கள், விளக்கங்கள், விவரங்கள், எவை என்று இந்த கண்ணோட்டத்தில் பார்த்தால் நம் வாழ்வில் நடப்பவை புரியும்.

அதற்கு உதாரணமாக - பிரம்மம், புருஷா, ஈஸ்வரா என்னும் அத்தியாயத்தில் இருப்பவை வரிக்கு வரி எப்படி Steve Jobs-க்கு பொருந்துகிறது என்பதை சில உதாரணம் கொடுத்து விளக்கியிருப்பார் கர்மயோகி. அது போல எல்லா அத்தியாயத்திலும் கொஞ்சம் கொஞ்சமாகவோ, அல்லது ஒரு அத்தியாயத்தில் முழுமையாகவோ நம்மை பொருத்திப் பார்க்க முடியும். அப்போது நமக்கு அன்னியமாக இருக்கும், புத்திசாலிகள், படிப்பாளிகள் , ஆங்கிலம் அறிந்தவர்கள் ஆகியோருக்கு மட்டுமே சொந்தமான Pride and Prejudice மற்றும் Trolleps போன்றவர்களின் நாவல்கள் மூலம் தான் இதை புரிந்துக் கொள்ள முடியும் என்னும் நிலை இருக்காது. நம்முள்ளேயே நூறு டார்சிகளும், ஆயிரம் விக்காம்களும் இருக்கும் போது நாம் எதற்கு வெளியே தேட வேண்டும். நாம் இது போன்று புரிந்துக் கொள்வது நம் தனித்துவம் விழிப்பு பெறுவதாகும். நாம் சித்த பூர்வமாக இருப்பதற்கு இன்றியமையாததாகும். அதன் மூலம் தான், நாம் அந்த சித் சக்தியை பெற முடியும். அல்லது நம்முள்ளே உள்ள அந்த சக்தியை எழுப்ப முடியும்.

சென்ற கூடலில் சித் சக்தி என்பது பிரம்மம் , படைப்பில், சிருஷ்டியில் இறங்க முடிவு செய்த பிறகு எடுத்த இரண்டாவது நிலை. அதாவது சத், சித் , ஆனந்தம் என்பதில் இரண்டாவது நிலை. பிரபஞ்சத்தைப் படைக்க, அதன் வடிவங்களை படைக்க எடுத்த இரண்டாவது நிலை. அந்த நோக்கம் அல்லது கருத்து, idea ஒரு விதமான உறுதி என்பதால் சக்தி பெறுகிறது. சலனத்தில் அதாவது செயல்பாட்டிற்கு வரும் போது ஆற்றலாக மாறுகிறது. அந்த உறுதியைப் பற்றிய நினைவுகள் சித்த பூர்வமாக Conscious- ஆக இருப்பதால் அது சித் சக்தி என்றாகிறது. எல்லா படைப்புகளுக்கு உள்ளேயும் அதுவே இருக்கிறது. இவை ஆரம்பத்தில் வடிவமில்லாத விஷயங்களில் எப்படி வெளிப்பட ஆரம்பித்தது, வெளிப்பட்டவைகளுடன் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு, வெவ்வேறு நிலைகளை எப்படி பெற்றது என்பதை ஐம்பூதங்கள், ஐம்புலன்கள் என்று மாறியதைப் பார்த்தோம். பின் தாவரம், விலங்கு, மனிதன் என்ற வடிவங்களை பெற்று இருக்கிறது என்று பார்த்தோம். இதன் அடிப்படையாக புரிந்து கொள்ள வேண்டியது , இவை அனைத்தும் வருவதற்கு முன் உருவானது சித் சக்தி என்பதைத் தான். அனைத்துக்கும் முன்னால் வந்தது - anterior force . சித் சக்தி என்ப து தான் . ஆனால் அறிவியல் - படைப்புகளின், அந்த வடிவங்களின் வளர்ச்சியால் தான் சித்தம் வளர்கிறது- அதன் ஆற்றல் பிறக்கிறது என்று கூறுகிறது. நாம் படித்தவற்றை, விஞ்ஞானத்தை - நம்புவதால் நம்மால் ஒவ்வொரு படைப்பின் உள்ளேயும் இந்த சித் சக்தி இருப்பதை, அவற்றுள் , அதாவது பல்வேறு வடிவங்களுக்குள்ளும் , ஒரு ஒருமை இருப்பதை உணரமுடிவதில்லை. இறைவன் எங்கோ இருப்பதாக நினைக்கிறோம். அவன் சக்தியை, ஆற்றலைப் பெற ஏதேதோ செய்கிறோம். இவை அனைத்தும் உள்ளே உள்ள அந்த சக்தி வெளிப்பட உதவும் கருவிகள். அது வெளிப்படும் அளவிற்கு அது விரும்பிய ஆனந்தம் வெளிப்படும் என்பது நமக்கு புரிந்தால் இந்த அத்தியாயத்தை அதிகமாக புரிந்துக் கொள்ள முடியும் - உதாரணமாக ஒரு கம்பெனியில் சேர்ந்தால் நமக்குத் தெரிவது salary , incentives , increments , promotion என்பது மட்டும் தான். அதற்காகவே வேலை செய்கிறோம். அதில் திருப்தி இல்லாமல் மாறி மாறி போய்க் கொண்டு இருக்கிறோம். ஆனால் சில கம்பெனிகளில் Labour ஆகச் சேர்ந்து VP வரை , MD வரை ஒரே கம்பெனியில் முன்னேறிச் சென்றவர்கள் இருக்கிறார்கள். ஒரு கம்பெனியில் வேலைக்காரனாக சேர்ந்து அதே கம்பெனியில் partner ஆக ஆன அன்பர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் கம்பெனியின் நோக்கம், அது ஏன் ஆரம்பிக்கப்பட்டது, எதற்காக அது செயல்படுகிறது, எதை நோக்கிச் செல்கிறது என்பதைப் புரிந்துக் கொண்டு அவற்றோடு ஒன்றியவர்கள். அதை உருவாக்கியவரின் சித்ததோடு ஒன்றியவர்கள். அதையே முக்கியமாக

எடுத்துக் கொண்டவர்கள். அதிலேயே தன் சித்தத்தை வைத்தவர்கள். அதற்கான அருளாக, ஆனந்தமாக அவை வெளிப்படும் இடமாக அல்லது கருவியாக salary , incentives , Increments, promotion போன்றவை இருக்கிறது. இதே உதாரணத்தை வியாபாரத்தில் பொருத்தி பார்த்தால் வாடிக்கையாளர் அவர் தேவை, அவர் வந்ததன் நோக்கம் போன்றவற்றை பார்க்கும் போது - அதை ஒட்டி நம் வியாபாரம் இருக்கும் போது -அவரது ஆனந்தம் வெளிப்படும் கருவி - லாபம் என்பது புரியும். ஆனால் பெரும்பாலும் லாபத்தை மனதில் வைத்தே வாடிக்கையாளர் கவனிக்கப் டுகிறார். அது போல நம் மனம், உணர்வு, உடல் ஆகியவற்றின் தேவைகளை மையமாகக் கொண்டு, முக்கியமாக கொண்டு அவற்றின் விருப்பு, வெறுப்பு, எதிர்பார்புகளுக்குதான் அனைத்தையும் செய்கிறோமே தவிர - அவை எதற்கு இருக்கின்றன-எதை வெளிப்படுத்த இருக்கின்றன - என்று புரிந்து செய்தால், அது வெளிப்படுத்தும் ஆனந்தம், வாழ்வில் அருளாகத் தெரியும். அதை பயிற்சியாக செய்ய முடியும். அப்படி செய்வதை subconcious gathering on the surface ஆழ்மனதை மேல் மனத்திற்கு கொண்டு வரும் நிலை என்கிறார். அதை, புரிவதற்காக, ஒப்புவமையாக ஒரு distant analogy- ஐ பார்க்கலாம்.

உதாரணமாக சிறு வயதில் என்னுடன் படித்த ஒருவனை இன்று ஏறத்தாழ இருபத்தைந்து வருடம் கழித்து பார்த்தாலும் என் நினைவுகள் அந்த வருடத்திற்கு ஓடி நிற்கிறது. பள்ளி, விளையாட்டு என்று நாங்கள் இணைந்திருந்த நாட்கள் அனைத்தும், அவனுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று அனைத்தும் ஒரு நொடி என் மனதில் வருகிறது. ஒரு கணத்தில் அந்த பத்து வயதில் வாழ ஆரம்பிக்கிறேன். திடீரென்று கமர்கட்டு, தேன் மிட்டாய், ஜவ்வு மிட்டாய், மாரடைச்சான் உருண்டை, முந்திரிப்பழம் , புளியம்பழம் எல்லாம் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது. இவையெல்லாம் நம் subconscious மேல்மனத்திற்கு வந்ததற்கான அடையாளங்கள். அதுபோல - பிரம்மத்தில் நாம் இருந்திருக்கிறோம் - என்பதை ஒரு கணம் உண்மையாக உணர ஆரம்பித்தால், அதைப் பற்றிய ஞானம், ஆர்வம் மேல் மனதிற்கு வர வாய்ப்பிருக்கிறது. அல்லது அன்னை நமக்கு இது வரை செய்ததற்கு நமக்கு நன்றி அறிதல் அதிகமாகும் போது, இதே போல புலன்களின் தேவையைத் தாண்டி அவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றுவதும், நம் ஆழ்மனம் மேல்மனமாக மாறுவதால் தான். அல்லது அன்னையிடம் ஆரம்பத்தில் வந்த போது இருந்த நம்பிக்கை பக்தி, இப்போது இல்லை என்ற உண்மை புரிவதும் ஆழ் மனம் மேல்மனமாகிறது என்று பொருள்.

இதற்கும் உதாரணமாக நாம் ஒன்றை பார்க்கலாம். நம் தாய் மொழி என்று ஒன்று இருக்கும். ஆனால் ஆங்கிலத்தில் சரளமாக பேசுபவராக இருப்போம். நன்றாக கவனித்துப் பார்த்தால் , நாம் எந்த மொழியில் பேசினாலும், முதலில் நம் தாய் மொழியில் சிந்தித்து அதன் translation-ஆகத் தான் எந்த மொழியும் வருகிறது என்பதை உற்று கவனித்துப் பார்த்தால் புரியும். அது போல நம் மனம், உணர்வு, செயல்களின் பின்னணியில் அன்னையை கொண்டு சிந்தித்து செயல்படுத்த முடிந்தால், அது நம்மை பற்றிய சித்தம், நம் மூலத்தை பற்றிய சித்தம் என்று இரண்டையும் உள்ளடக்கியது என்பதால் அந்த நிலையை சத் புருஷன் என்றும், அதனால் வெளியிடும் ஆற்றலை , சக்தியை, சித் சக்தி என்றும் நடைமுறையில் எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள இருப்புகள் அத்தனையும் ஒரே ஆற்றலில் உருவாக்கப்பட்டது என்பதால் நம் எல்லா உணர்வு, உணர்ச்சி, எண்ணம், செயல் அனைத்திலும் அதன் ஆற்றல், சக்தி இருக்கிறது என்பதே உண்மை. அதை ஏற்றுக் கொண்டு அந்த சக்தி வெளிப்பட உதவுவதே நம் வேலை.

இந்த நினைவு வந்தவுடன் நமக்கு வரும் கேள்விகள்- அப்படி ஒரு சக்தி எனக்குள் இருக்கிறதா? அதன் இயக்கத்திற்கும் பரிணாம வளர்ச்சிக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? அல்லது, அதன் ஆற்றலால் பரிணாம வளர்ச்சியால் ஏதாவது மாற்றங்கள் இருக்கிறதா? இதற்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா போன்ற கேள்விகள் எழுகிறது. சக்தி தனிப்பட்டது அல்ல. அது பிரம்மத்தின் இயல்பு. ஒன்றோடு ஒன்று இணைந்தது, பிரிக்க முடியாதது. அப்படி இருக்கும் போது அதற்கு தனி நோக்கமோ, அல்லது நோக்கமே இல்லாமலோ இருக்க முடியாது. எந்த ஒரு காரணமோ, பயன்பாடோ, பரிணாம வளர்ச்சியோ அல்லது அதன் முடிவான நிலையையோ எட்டுவதாக இருக்க முடியாது. அது அதுவாக இருப்பதற்கே இருக்க முடியும். பிரம்மம், சக்தி, ஆற்றல் ஆகியவற்றின் செயல்பாடுகள் நமக்கு புரியவில்லை என்றால் - நம் ஆனந்தத்திற்கும், பரிணாம வளர்ச்சிக்கும், இந்த சக்திக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றே புரிந்துக் கொள்வோம். பிரம்மம் conscious being என்னும் போது, அது சித்த பூர்வமாக இருக்கிறது என்று நாம் ஏற்றுக் கொள்ளும் போது, அது வெளிப்படும் சக்தியும் சித்த பூர்வமாக, அதற்கான உணர்வுடன், அதற்கான ஞானத்துடன் கூடியதாகத்தான் இருக்க வேண்டும். அப்படி என்றால் - பிரம்மம் - சக்தியின் ஆதிக்கத்தில் இருக்கிறதா, தன் வெளிப்பாட்டுக்கு சக்தியையே எதிர்பார்த்து உள்ளதா என்னும் கேள்வி எழுகிறது. மரபும், மாயாவாதிகளின் தத்துவங்களும் பிரம்மம் சக்திக்கு கட்டுப்பட்டது என்றே சொல்கிறது. உண்மையில் - கட்டுப்பட்டு செயல்படுவது - பிரம்மமாக இருக்க முடியாது.

அவையனைத்தும் ஒரு நோக்கத்தின் அங்கமாக இருக்கிறது என்பது புரிந்தால், நம் வாழ்வு நமக்குப் புரியும். நம் வாழ்வு தெய்வீக வாழ்வு ஆகும்.

உதாரணமாக என் மனைவி மிகுந்த சுதந்திரம் இருப்பதாக நினைக்கிறார். நான் என்ன சாப்பிட வேண்டும் என்பது முதல், எப்போது எனக்கு வீட்டில் Computer system தருவாள் என்பது வரை அனைத்தும் அவள் விருப்பமே என்று இருப்பது போல இருக்கும். நான் எதிலும் தலையிடுவதில்லை, வலியுறுத்துவதில்லை என்பது அவள் நினைப்பு. அது அவரது மிகப் பெரிய சுதந்திரம் என்று நினைக்கிறார். நன்றாக கவனித்தால், அனைத்தின் பின்னாலும் என் சட்டம், என் மனப்பான்மை, என் விருப்பம், அதற்கான வரையறை, என அவளை அறியாமல் அதனுள் நிற்பார். அப்படியென்றால் என் ஆதிக்கத்தில் இருப்பதாகப் பொருள். ஆனால் என்னை பார்த்தால், எல்லாம் என் சட்டப்படி, திட்டப்படி, நடக்கும் வரை, long rope கொடுத்திருக்கிறேனே தவிர இப்படித் தான் நடக்க வேண்டும் என்று இருக்கும். அது ஆதிக்கமா என்றால் இல்லை. அவள் வீட்டார், உறவினர்கள், நண்பர்கள் போன்ற விஷயங்களில் எல்லாம் நான் சப்த நாடியும் ஒடுங்கி இருப்பேன். சண்டை வரும் நேரங்களில் எதிர் வீட்டுக்காரர் ஆம்புலன்ஸ்-ஐ கூப்பிடலாமா என்று பார்க்கும் அளவிற்கு இருக்கும். சற்று நேரத்தில் coffee சாப்பிட நாங்கள் two wheeler -இல் Saravana Bhavan செல்வதைப் பார்த்தால் , அவருக்கு பைத்தியம் பிடிக்கும். இதையெல்லாம் பார்த்தால் குடும்பம் என்னும் structure, அதைத் தாண்டிய சமூகம் என்னும் structure நம்மை நடத்துவது தெரியும். அதையும் ஆராய்ந்தால்- அதன் பின் உள்ள பண்பு- உதாரணத்திற்கு சுமுகம் என்னும் பண்பு- இருக்கும். இதையெல்லாம் கவனித்தால் புரிந்து கொள்ளலாம் என்னும் நிலையில் இருக்கும்போது - நம் வாழ்வில் அல்லது நம்முள்ளே ஏதோ ஒரு சக்தி இருந்து நடத்தி கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த ஒன்றை பார்த்தாலும் அது படைப்பாற்றல் கொண்ட பண்பை நோக்கியதாக, அதன் ஆற்றலை வெளிப்படுத்துவதாக, அதை நோக்கிய பயணமாக இருக்கும். இவையெல்லாம் தனித்தனியாக இருப்பதாக தோன்றினாலும், ஒரு நிகழ்வில் ஒன்றோடொன்று இணைந்து, எதனுடைய தாக்கத்தையும் பிரித்து பார்க்க முடியாமல், ஏதாவது ஒரு கட்டமைப்பின், structure -றின் நோக்கத்திற்காக செயல்படுவதை சூட்சுமமாக கவனித்தால் புரியும்.

வாழ்வில் நடக்கும் பெரும்பாலானவற்றை கவனித்து அதன் மூலம் வரை சென்றால், அது courage, perseverance, silence, humility, harmony , equality , knowledge என்று ஏதாவது ஒன்றை தர, அதாவது Mother Symbol-லில் இருக்கும் manifesting aspect என்று சொல்லப்படும் படைப்புகளுக்கான பரிணாம வளர்ச்சிக்கான

பண்புகளை நோக்கிய பயணமாகவே இருக்கும். அதாவது அந்த ஆற்றல் பிரபஞ்சம், சித் சக்தி போன்றவற்றின் அங்கமாக மட்டுமல்ல, நம் ஜடத்தின் கடைசி, அடிமட்ட செயல் வரை, அதன் அங்கமாக இருக்கிறது என்பதே அதன் பொருள். எதுவும் எதையும் கட்டுப்படுத்துவதில்லை. வளர்ச்சியைத் தரும் அங்கமாக இருக்கிறது என்பதே அதன் பொருள். அதாவது பிரம்மம் ஒவ்வொரு நிலையிலும் கட்டுப்பட்டுள்ளது போன்று தோன்றினாலும், பின்னர் அதன் செயல்பாடுகள், வெளிப்பாடுகள் நிறைவேறும் போது. அது தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டது தெளிவாகத் தெரியும். பிரம்மம் சுதந்தரத்தை இழந்திருக்கிறது. ஆனால் இழக்கவில்லை - அது பற்றிய கான்சியஸ் உடன்தான் அது இருக்கிறது என்னும் நிலை அது. சென்ற கூடலில் சொன்ன மகத், அகங்காரம் என்பது போல இரண்டின் அடிப்படையிலேயே நாம் பார்க்கிறோம். உண்மையில் நமக்கு இன்றியமையாதது என்று நினைப்பது கூட நம் அகந்தை தான். காரணம் அது புலனறிவு , மற்றும்அது தந்த அனுபவ அறிவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே இருக்கிறது. உண்மையில் இன்றியமையாதது என்று நினைக்கும், இதயத் துடிப்பு, நரம்புகளின் இயக்கம் கூட நம் மனப்பான்மையே . உதாரணமாக ஒரு ஆன்மீக பெரியவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வந்தபோது, நினைவிழந்த நிலையில் நான் இருக்க விரும்பவில்லை, மயக்க மருந்து தேவையில்லை, அந்த பகுதியின் வலியை என்னால் மரத்து போக வைக்க முடியும் என்று மயக்க மருந்து இல்லாமல் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இன்னொருவர் உடலை விட்டு வெளியே சென்ற போது, அவரது உடலுக்கு இதயத்துடிப்பு கூட இல்லை என்பதை அவரது பக்தர்கள் கண்டார்கள். அவர் அவரது உடலுக்குள் மீண்டும் வந்தவுடன், இதயத் துடிப்பு வந்தது. ஒரு சாமியாருக்கு பொய் கண்டறியும் சோதனை வைத்தபோது - அது நரம்புகளின் பதட்டத்தை வைத்து துல்லியமாக சொல்லும் என்பதால் lie detector வைத்த போது அது zero என்னும் நிலையைக் காட்டியது. சராசரி மனிதனின் குறைந்தபட்ச ஓட்ட நிலையில் கூட அது காட்டவில்லை என்பது மருத்துவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. அதனால் உடல் உறுப்புகளைப் பற்றி, நம் கட்டுப்பாடுகளில் இல்லாத விஷயங்களைப் பற்றிய நம் ஞானமும் அகந்தை தந்ததே. ஆனால் conscious force சித் சக்திக்கு அந்த ஞானம் உண்டு. மனித கருவிகள் , அதன் அனுபவங்கள், இல்லாமலேயே அதை வெளிப்படுத்தும் திறமை உண்டு. உதாரணமாக மன மாற்றங்கள் பல வருடங்களுக்கு முன் நடந்த தவறுகளை கூட, உடலால் செய்த தவறை கூட சரி செய்வதை காண்கிறோம். 15 வயது முதல் 40 வயது வரை நான் அடித்த கொட்டத்திற்கு, நான் சாப்பிட்ட, குடித்த , புகைத்த அளவுகளை எடுத்துக் கொண்டால், என்

உடல் பல விதங்களில் பாதிக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் இன்று ஐம்பத்து ஆறு வயது வரை, Sugar, BP போன்ற சாதாரணமாகிவிட்ட விஷயங்கள் கூட இல்லை என்பது மனமாற்றம் மற்றும் கடந்த கால சமர்பணத்தால் தான் என்று நினைக்கிறேன். இது எதைக்காட்டுகிறது என்றால் அனைத்தும் கருவியே, அது பிரம்ம நோக்கத்தை - தன்னை-வெளிப்படுத்தவே இருக்கிறது. கருவிகள் அதற்கு ஒரு பொருட்டில்லை என்பது புரிகிறது. அகந்தையின் வெளிப்பாடுகளான உடல், உணர்வு, மனம் ஆகியவற்றின் தேவைகளை - அகந்தையின் பரிமாணங்கள் பொறுப்பு எடுத்துக் கொள்வதால், நமக்கு இந்த கருவிகள் தேவைப்படுகிறது. அதன் திருப்தி, நோக்கமே நமக்கு முக்கியமாகப் படுகிறது. சித் சக்தி அந்தப் பொறுப்புகளை எடுத்துக் கொள்ளும் போது, அதன் வெளிப்பாடு பிரம்ம நோக்கமாக இருக்கும் என்பதால் அது திருப்தி என்ற அளவில் இல்லாமல் ஆனந்தம் என்னும் அளவில் இருக்கும். நாம் கவனம் தரும் இடங்கள், attention, நன்றியறிதல், சுத்தத்திற்கு, organisation-க்கு , முன்னேற்றத்திற்கான திறமை, , திறன் மனப்பான்மை ஆகியவற்றை பெற நாம் செய்யும் முயற்சிகளுக்கு, வாழ்வு respond செய்யும் முறைகளை கவனித்தால் இது வெளிப்படையாகத் தெரியும்.

இது உயிருடன் இருக்கும் வடிவங்களுக்கு மட்டும் தானா என்றால் இல்லை. சத் புருஷனும், சித் சக்தியும், அதன் சித்த பூர்வமான ஆற்றலும் உயிருள்ளது, உயிரில்லாதது என்று எல்லாவற்றிலும் இருக்கிறது என்பதற்கு உதாரணம் - நான் சென்ற கூடலில் அலுமினிய பொருட்கள் விற்றதை பற்றி சொன்னது. நாம் ஒரு பொருளை சுத்தம் செய்தால் வாழ்வு ஏதோ ஒரு வகையில் ஒரு பரிசை தருகிறது. அது நம் சித்தத்தில், consciousness- இல் இருக்கும் நிலையை பொறுத்து - அதிகமாகவோ குறைவாகவோ வருகிறது. நான் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் வாங்கிய ஒரு மிஷின் மேல் எனக்கு தனிப் பிரியம் உண்டு. மற்ற machine -களை விட அதன் மேல் சற்றே அதிகப் பிரியம் உண்டு. அதனால் அது ரிப்பேர் ஆவதற்கு முன்னால் ஏதோ ஒரு உணர்வில் அது தெரியும். பெரும்பாலும் அது ஓடும் சத்தம், அந்த எஞ்சின் வாசனை எனக்கு புரிய வைக்கும். அல்லது 50 km தள்ளி இருந்தால் கூட ஏதோ ஒன்று தோன்றும். phone செய்து அந்த machine -ஐ check செய்யும்படி சொல்வேன். தவறாமல் ஏதோ ரிப்பேர் ஆகும் நிலையில் இருக்கும். சில நேரங்கள் ஒரு பொருளை அதிகமாக உபயோகப்படுத்தும் போது இதற்கு வாய் இருந்தால் அழுதிருக்கும் என்று சொல்வதை கேட்டு இருக்கிறோம். அது நமக்குத் தெரிந்த ஆழ் மன உண்மைகளின் ஒரு வெளிப்பாடு. இது - ஒரு புறம் புலன்களை தாண்டி, உறுப்புகளைத் தாண்டி நம்மால் ஒரு செயலை செய்ய

முடியம் என்பதை காட்டுகிறது.  மறுபுறம் ஜடமான மிஷின் என்று நாம் நினைப்பவற்றிற்கு கூட, உயிரில்லாத விஷயங்களுக்கு கூட தன்னை வெளிப்படுத்தும் consciousness இருக்கிறது என்பது புரிகிறது.  அதை நாம் தொட வேண்டும், தொடர்பு கொள்ள வேண்டும் என்பதே முக்கியம்.

இதன் பின் உள்ள process என்னவென்றால் நாம் எப்போதெல்லாம், புலன்களிலிருந்து விலகி இருக்கிறோமோ அப்போதெல்லாம் உயர்ந்த ஒன்று வெளிப்படுகிறது. அதாவது நம் அகந்தையின் ஆற்றல் அடங்கி இருக்கும் போது பிரம்மத்தின் ஆற்றல் வெளியே வருகிறது. அதன் சக்தி, ஆற்றல் விழிப்பாக இருக்கிறது. இதை வாழ்வில் பார்க்கும் போது நாம் புலன்களை எப்போதெல்லாம் அதிகம் சார்ந்து இருக்கிறோமோ, உதாரணமாக பேச்சுத் துணைக்கு ஆள் தேடும் நேரம், யாருக்காவது phone போட்டு பேசத் தோன்றும் நேரம், நாம் ஏன் இப்படி இருக்கிறோம் என்னும் நேரம், ஒரு வேலை செய்ய அல்லது mail அனுப்ப computer முன் அமர்ந்து Twitter , Facebook , You Tube , என்று சுற்றி 5 நிமிட வேலையை அரை மணி செய்யும் நேரம், நொறுக்குத் தீனியை தேடும் நேரம், உபயோகமில்லாத சீரியல் பார்க்கும் நேரம், வேலைகளை தள்ளிப்போடும் நேரம், வீட்டில் நிறைய முக்கியமான வேலை இருக்கும் போது அதிகாலையில் இயற்கையை photo எடுக்கிறேன் என்று சென்று - என் aspiration -க்கு, creativity -க்கு ஆதரவு இல்லை என்று நினைக்கும் இடங்கள், நம் வீட்டில் இருப்பவர் லைக் ஐ பெறாமல் , facebook , இன்ஸ்டாகிராம் லைக் குகளை பெற அலையும் நேரம் , உருப்படியாக , வளத்திற்கு, முன்னேற்றத்திற்கு எதுவும் படிக்க - செய்ய தோன்றாத நேரம் என்று அறிவுக்கு பொருந்தாத- புலன்களை திருப்தி படுத்தும் இடங்களை, புலன்களின் பிடியில் இருக்கும் இடங்களை -கவனித்தால் அங்கு தான் நம்மை மாற்றக் கூடிய சித் சக்தி இருப்பது தெரியும்.  அதுவே அதன் ஆற்றல் செயல்பட தயாராக இருக்கும் இடங்கள். இது போன்றவற்றை, இடங்களை subconscious, subliminal, subconcient, superconcient என்றெல்லாம் கூறுகிறார். அதனுள் செல்லாமல் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நாம் மனம் என்று பொதுவாக சொல்லும் புலன்க ள், அனுபவங்க ள் சார்ந்த அறிவுக்கு பின்னால் ஒரு range of conscious faculties - அடுக்கடுக்கான ஒரு சித்தத்தின் அமைப்பு இருக்கிறது.  அதை புரிவதற்காக சொல்ல வேண்டுமென்றால் அதன் ஒரு நிலையை mentality, attitude என்று சொல்கிறோம். இந்த இரண்டும் மனம் - உயர்ந்த நிலைக்கும் செல்ல முடியும், அதன் தாழ்ந்த நிலைக்கும் செல்ல முடியும் என்பதை காட்டும் இடங்கள். நம் சித்தம் கீழே போவதை நாம் பல இடங்களில் உணர்ந்து இருக்கிறோம்.  அதே போல மேலே போவதையும் உணர முடியும்.  இது

தினமும் நம்முள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. எப்போது இந்த இரண்டையும் தாண்டி ஒரு ஆர்வம், இறைவனுக்கான ஆர்வம், அவன் பண்புகளுக்கான ஆர்வம், சத்தியத்தின் வழியில் முன்னேற்றத்திற்கான ஆர்வம், சித்தத்தின் விரிவுக்கான ஆர்வம் வருகிறது என்றால் நம் புலன்கள் உயர்ந்ததை தொடும் போது, அதாவது பக்தி மேலீட்டால், நன்றியறிதலால் ஏதாவது ஒரு அன்னைக்கான sincerity- ஆல் இந்த conscious நமக்கு வருகிறது. அப்போது அது தன் ஆற்றலை வெளிப்படுத்துகிறது. Mentality, attitude என்பது போன்ற ஆழ் நிலைகளில் முடியவில்லை என்றாலும் - Behaviour, manners, etiquitte - இங்கிதம், ஆசாரம், பண்பாடு போன்ற நிலைகளில் கூட நம்மால் conscious ஆக இருக்க முடியவில்லை என்பதால் தான் நாம் பக்தி என்ற நிலையிலேயே இருந்து திருப்திப்பட்டுக் கொள்கிறோம்.

Life Divine படி, Savitri படி, நடக்கும் என்று சொன்னால் பிடிக்கிறது. செய்கிறோம். காரியம் நடக்கிறது. ஏன் நடக்கிறது என்றால் சூட்சுமமாக அதனால் நம் சித்தம் உயர்வதால் நடக்கிறது. ஏன் அப்படி நடக்கிறது என்பதற்கான தேடல், அந்த ஞானத்திற்கான தேடல் நம்மிடம் இல்லை என்பதால் தான் அதை புரியவில்லை என்கிறோம். நான் என் வாழ்வில் பொறுத்திப் பார்த்து சொல்லும் உதாரணங்களை போல எல்லோர் வாழ்விலும் நடந்திருக்கும். அதை உற்றுப் பார்த்தால் Life Divine புரிகிறதோ இல்லையோ, நம் வாழ்வு ஏன் இப்படி இருக்கிறது என்பது புரியும். முன்பு சொன்னது போல Pride and Prejudice , Trollepe போன்ற intellectual ஒப்பீடுகள் என்னைப் போன்றவர்களுக்கு புரியாது என்று இருக்கும் போது எனக்குள் இருக்கும் நூறு டார்சி , ஆயிரம் விக்காம்களை கண்டுபிடிப்பதே எனக்கு உயர் சித்தமாக இருக்கும். அந்த அளவிற்கு அகந்தையும் கயமையும் இருக்கிறது. மேல் மனதை தாண்டிப் பார்த்தால் - நம் பொதுபுத்தியில் புரிந்தவற்றை ஆராய்ந்தாலே நம்மைப் பற்றி புரியும். நாம் எந்த , ஈர்ப்புகளால், கவர்ச்சிகளால் , யாரால், எந்த மனப்பான்மையால், நாம் அசைக்கப்படுகிறோம். எந்த ஆற்றல் நம்மை இயக்குகிறது என்று கவனித்துப் பார்த்தால் பெரும்பாலும் அகந்தையின் சக்தியே நம்மை நடத்துவது தெரியும். அதைப் புரிந்து கொள்ளும் process நாம் புலன்களில் இருந்து வெளியே வந்தால் தான் புரியும். முன்பு சொன்ன mentality-யிலிருந்து வெளியே வர உதவும்.

மனங்களின் நிலைகளை சொன்னாலும் அதை நம்மால் உணர முடியாததற்கு காரணம் ஏதாவது ஒரு நிலையில் கூட அது நமக்கு organized ஆக இல்லாததால் தான். குறிப்பாக, நம் அலைபாயும் உணர்வுகள், சமநிலை கொண்ட உணர்ச்சிகளாக மாறும் இடத்தில் நம் consciousness

organize ஆகிறது. It is organized between mental sensibility and vital neutrality . அது உயர் சித்தத்தை நோக்கி இருக்கும் போது சித்சக்தி செயல்படத் தொடங்குகிறது. அதை படைப்புகளுக்கான ஆனந்தத்தை முழுமையாக வெளிப்படுத்துகிறது. சித் சக்தியால் நாம் இயக்கப்பட வேண்டிய முயற்சியை கவனமாக எடுப்பதை நாம் சித்த பூர்வமாக இருப்பதாக எடுத்துக் கொள்ளலாம் .

ஆன்மா எப்போதும் பிரம்மத்தையே பார்த்து அதன் பண்புகளையே, நோக்கத்தையே நினைத்துக் கொண்டு இருப்பது போல, நம் மனம் எப்போதும் சத்தியத்தை, அதன் பரிமாணங்களை, அதன் வெளிப்பாடுகளை மட்டுமே பார்த்துக் கொண்டு இருப்பதை நாம் conscious-ஆக அதன் சக்தியோடு இருப்பதாக எடுத்துக் கொள்ளலாம் . இது நம் இருப்புக்கான விழிப்பு. அதுவே நம் சித்த பூர்வம். Conscious is awareness of our self-existence என்று இதை வரையருக்கிறார். .

நம் புலன்களுக்கு உட்பட்டு குறிப்பாக, உணர்வு பூர்வமாக , உணர்ச்சி பூர்வமாக இருப்பதால்தான், அறிவுக்கும், மனதுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதால்தான் - அறிவுக்கு, மனதுக்கு தெரிந்த உயர்ந்த விஷயங்களைக் கூட முன்னேற்றத்திற்கு என்று தெரிந்த விஷயங்களைக் கூட நம்மால் உணர்வில் ஏற்று செய்ய முடியவில்லை. நம்முள்ளே இறைவன் இருக்கிறான் அல்லது அன்னை இருக்கிறார் என்று நம்பினாலும் அதை நோக்கி நம் பார்வையை திருப்ப முடியவில்லை. உதாரணமாக சூரியகாந்தி பூவை எடுத்துக் கொண்டால், பரிணாமத்தில் ஆரம்ப இடத்தில் இருந்தாலும், சூரியனைப் பார்த்தால் தான் மலர முடியும், வளர முடியும் என்று இருக்கும் போது எங்கு இருந்தாலும் அதை நோக்கியே இருக்கிறது. தன் நோக்கம், தேவை ஆகியவற்றை ஒட்டிய செயல்களை மட்டுமே முக்கியமாக, முனைப்பாக, சித்த பூர்வமாக செய்கிறது. Indoor-றில் வைத்தால் கூட ஜன்னலை நோக்கி - சூரியன் இல்லை என்றாலும் குறைந்தபட்சம் வெளிச்சத்திற்கு வளைகிறது. தினமும் ஒன்றிரண்டு மணி நேரம் வெளியே சூரிய ஒளியில் எடுத்து உள்ளே வைப்பவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பூக்கள் ஒரு சாமந்தி அளவே இருக்கிறது. அதாவது அது தன் சித்தத்தின், விழிப்பின், ஆற்றலை பெறும் அளவிற்கே மலர்கிறது. ஆனால் ஆறறிவு பெற்றவன் மனிதன் என்று கூறும் போது தன் முன்னேற்றம் எங்கே என்று தெரிந்தாலும், தன் முன்னேற்றம் யாரால், எப்படி தடைபடுகிறது, exploit செய்யப்படுகிறது என்று தெரிந்தாலும் அதிலிருந்து தன் பார்வையை , உணர்வை, அறிவை, உயர் சித்ததை நோக்கித் திருப்புவதேயில்லை. மேல் மனதில் அப்படி இருந்தாலும், நம் ஜீவனின் ஏதோ ஒரு பாகத்தில் ஒரு

ஒருமை இருக்கிறது என்பதை நம்புகிறோம். அல்லது பிரம்மத்தின் ஒரு வடிவம், ஒரு தளம் நம்முள் இருக்கிறது என்பதை நம்புகிறோம். அந்த நம்பிக்கையை அதிகரிக்கும் போது அதை நோக்கி நம்மை திருப்பும்போது நாம் சித்த பூர்வமாக இருப்பதாக, அதன் சக்தியை வெளிப்படுத்த உதவும் கருவியாக நாம் மாறலாம். அதன் மூலம் பிரம்மம் தன் விருப்பத்தை, அதற்காக அவன் ஏற்படுத்திய சலனத்தை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

Anyone can realise the Divine. But here I mean manifesting the Divine என்கிறார் பகவான். அதையே கர்மயோகி - நடைமுறைக்காக விளக்கும் போது - not perfection of the form. We need perfect expression in the form என்கிறார். அதாவது இறைவனின் பண்புகளை, அவன் சித்தத்தை முழுதுமாக வெளிப்பட்டு ஒரு செயல் செம்மைபடுவது அதற்கான விழிப்புடன் நாம் இருப்பதே முதல் தேவை. அதன் செயல் முறை தான் Token Act என்று கர்மயோகி தந்த முறை. organisation of consciousness என்பதை முழுவதும் உள்ளடக்கிய முறை அது.

வாழ்வில் structure- ரில் அதாவது ஒரு கட்டமைப்பில் அதைப் பார்க்க வேண்டும் என்றால் திருமணத்தை சொல்லலாம். சமுதாயப் பார்வையில் settle ஆவது என்றால் பெரும்பாலும் திருமணத்தையே குறிக்கும். அது இரு மனிதர்களின் உணர்வுகள், மனங்கள், அதன் physical, vital, emotional energy-கள் வடிவம் பெறுவதற்காக ஏற்பட்டது. அதனாலேயே நாம் வாழ்வில் அடுத்த கட்டத்திற்கு சென்று விட்டதாக நினைப்போம். இது திருமணம் நம் வாழ்வில் realise ஆவது போன்றது. ஆனால் அது perfect form என்னும் அளவிற்கு இருக்க வேண்டும் என்றால் marriage என்னும் structure நமக்கு முழு பயனையும் தர வேண்டும் என்றால், திருமணத்திற்கு தேவையான உயர் பண்புகள் அத்தனையும் அங்கே வரும் போது தான் அங்கே முழுமை, செம்மை பிறக்கிறது - அங்கு இருப்பது, பாசம் , காதல் அன்பு என்பதல்ல. அங்கே வருவது சித் சக்தி. தெய்வீக அன்பு manifest ஆகியிருக்கும் படைக்கப்பட்டிருக்கும்.

இவையெல்லாம் நமக்குத் தெரியாதது அல்ல. நம் அகந்தை பிடியை விடாததால் ஏற்படுவது இது. அப்படி பண்புகளை பின் பற்றினாலும் அதன் பின் ஏதோ ஒரு சுயநலம் இருக்கும். அல்லது இறைவன் தரும் குரலை, உள்ளுணர்வை நம் இஷ்டத்திற்கு புரிந்து கொள்வோம். இறைவனைப் பற்றிய அவன் கருத்து, சத்தியம், பண்புகள் அடிப்படையில் அதை புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக அன்னையிடம் வந்த புதிதில் ஏராளமான பிரச்சனைகளோடு, கடன் பிரச்சனையும் இருந்தது. வழக்கம் போல கடனை வாங்கி கடனை அடைக்கும் முறையே எனக்கு எளிதாக

இருந்தது.  அதற்கு ஏற்ப நான் கேட்ட இடத்தில் எல்லாம் பணம் கிடைத்தது. எங்கு  சென்றாலும் அந்த இடத்தில் ஒரு Mother படம் இருக்கும். அதனால் அவர் அனுமதி இருக்கிறது என்று நன்றி சொல்லி வாங்கிக் கொள்வேன். சிறிது நாள் கழித்து பல பிரச்சனைகள் தீர்ந்தாலும் கடன் பிரச்சனை வளர்ந்து கொண்டே போவது போல தோன்றியது.  இதைப் பற்றி ஒரு அன்பரிடம் பேசினேன். அவர் சிரித்தார்.  அன்னை அங்கு எல்லாம் வந்து வாங்காதே வாங்காதே என்று சொல்லி இருக்கிறார்.  நீ உன் பார்வையில் புரிந்து கொண்டாய். அன்னையை அன்னையின் பார்வையில் அன்னை சொன்னவற்றை வைத்து புரிந்து கொள்ள வேண்டும் என்றார். அந்த புரிதல் தான் நம்மை இறைவன் விரும்பும் ஆனந்தத்தை அடைய வைக்கும்.

சமர்ப்பணம் என்று சொல்கிறோம். உண்மையில் அது சமர்ப்பணமே அல்ல. நம் பாரத்தை அன்னையிடம் இறக்கி வைப்பதால் வரும் ஒரு வகையான relief. அதை நிம்மதி என்று கூட சொல்ல முடியாது.  ஆனால் கர்மயோகி சொல்வது சமர்ப்பணம் செய்து விட்டால் joy வர வேண்டும் என்கிறார். சமர்ப்பணம் என்று சொல்லிய பிறகும் - அனைத்தும் புலன்களின் பிடியிலேயே இருப்பதை பார்க்கலாம். அதாவது Thy Will என்று சொல்லுவோம். பக்தி நம்பிக்கை மேலிட்டு அதை ஏற்றுக் கொள்வதாக அறிவு சொல்லும். ஆனால் உணர்வு நமக்கு பிடிக்காதது, எதிர்பாராதது நடந்து விடுமோ என்று கலங்கும். உடல் படபடக்கும். அதனால் சமர்பணத்தின் மூலம் அன்னை தர விரும்பிய சுதந்திரத்தை, ஆனந்தத்தை நம்மால் அனுபவிக்க முடியவில்லை. இது போன்ற Conscious knowledge தான், Conscious force -ஐ தர முடியும். அதை புலன்களைத் தாண்டிய சித்தத்தின் மூலம் அறியும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். , நம் உடலுக்கு , உணர்வுக்கு, மனதிற்கு அந்த விழிப்பு வர வேண்டும். நாம் நம்மை சுற்றியுள்ள சமூகத்தை பற்றி அது எதிர்பார்க்கும் மனப்பான்மைகள், செயல்கள் ஆகியவற்றை பற்றி எவ்வளவு கவனத்துடன் இருக்கிறோம் என்று பார்த்தால் இது புரியும்.  கல்வி, வேலை, திருமணம் என்று அனைத்தையும் அதன் கருத்தை ஒட்டியே செய்கிறோம்.  அதுவே நடத்தை, கலாச்சாரம், பண்பாடு, போன்றவற்றிற்கு காரணமாகிறது. சமுதாயத்துடன் எந்த அளவு நம் முரண்பாடு குறைவாக இருக்கிறதோ அந்த அளவிற்கு வாழ்வு சுமுகமாக நடக்கிறது. இதை அப்படியே பிரம்மத்திற்கு பொருத்திப் பார்த்தால் அது விரும்பும் நடத்தை, மனப்பான்மை , பண்புகளை ஒட்டி , நம் வாழ்வை அமைத்துக் கொண்டால் வாழ்வு ஆனந்த மயமாக இருக்கும்.

ஒரு கட்டுரையில் வாழ்வில் பிரச்சனை, முரண்பாடு என்பதே நாம் யாராக இருக்க வேண்டும் என்று நாம் நினைப்பதற்கும், நாம் யாராக இருக்க

வேண்டும் என்று இறைவன் நினைப்பதற்கும் இடையே வருவது தான் என்று கர்மயோகி கூறியிருப்பார். அதனால் நம்மில் -இறைவன் விரும்பிய வெளிப்பாடு எது என்பது புரிந்து நடந்தால் அதன் மூலம் உடல், உணர்வு, மனதில் வரும் சுமுகமே உயர்ச்சித்தம். அதன் ஆற்றல் ஆனந்தமாக வெளிப்படும்.

அன்னையை Truth Consciousness , Truth Force, Supermind, Supramental Force என்று எல்லா இடங்களுக்கும் பொருத்தமானவராக, நம் நிலைக்கு ஏற்ப எல்லா நிலைகளிலும், செயல்களிலும் செயல்படுபவராக அதற்கான சக்தி, ஆற்றலைத் தருபவராக பார்க்கலாம். என்றாலும், அவரது பிறப்பிடம் அல்லது அவர் தோன்றிய இடம் இந்த conscious force - சித் சக்தி என்னும் இடமே என்கிறார் கர்மயோகி. காரணம், இந்த சித்தே பிரம்மத்தின் முதல் படைப்பு என்னும் போது, பிரம்மம் ஏற்படுத்திய சலனம், அதனால் ஏற்பட்ட ஸ்ருஷ்டி ஆகியவற்றின் சந்திப்பில், அவை இரண்டும் சேரும் இடத்தில் தோன்றி பிரம்மத்தின் பகுதியாகவே இருப்பவர்.

நம்மை பொறுத்த வரையில் அவரை இந்த சித் சக்தியாக புரிந்துக் கொள்ள வேண்டும் என்றால் ஆனந்தத்தை அனுபவிப்பவனுக்கும் - அவன் தேடும் ஆனந்தம் இருக்கும் இடத்தையும் இணைக்கிறார். இணைக்கும் இடத்தில் இருக்கிறார். அது சத்தின் இடம். சத்தின் கருத்தை, சட்டங்களைக் கொண்ட இடம் என்பதால் அதுவே அன்னையின் சட்டம். அதனால் பரிணாம வளர்ச்சிக்காக நாம் எதை செய்தாலும் அதற்காக உதவக் கூடிய நிலையில் இருக்கிறார். அவர் conscious -ஆக சித்தப்பூர்வமாக, அதற்கான சக்தி, ஆற்றலோடு இருப்பவர். எப்போதும் நம்மில் செயல்படும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கிறார். அவரை நோக்கி நம் உடலை, உணர்வை, மனதை, திருப்பினால் அவரது அருள் ஆனந்தமாக நம் வாழ்வில் வெளிப்படும். அது சாதாரண வாழ்வை தெய்வீக வாழ்வாக்கும்.

இந்த அத்தியாயத்தின் தொடர்ச்சியை அடுத்த கூடலில் கேட்கலாம்.